தவநாத மாமுனிவர்

# தயானந்த அடிகளார்





## பாதம் பணியும் பாமாலை

ஓங்கார நாதப் பொன்மணியாய்
ஒலிவீசும் பூஜ்ய மகரிஷியின்
நீங்காத அருள்ஞானத் தவப்பணியில்
நிழலாக அமர்ந்த சுத்தாநந்தர்
ரீங்காரம் இசைக்கும் கங்கையுடன்
ரிஷிகேசில் நிற்கும் குருநாதா
தாங்காத என்மனத் துயரெல்லாம்
தணித்து அருள்வாய் தவநாதா

சித்தர் மகிழ்ந்தாடச் சிவஞானச்
சிரிப்பில் சக்தி நடனமாட
பத்தில் கலந்த என்குணத்தை
பற்றிய பூஜ்ய மகரிஷியை
நித்தம் வணங்கி ரிஷிகேசில்
நிழலாய் அமர்ந்த சுத்தாநந்தா
பித்தன் என்னைத் தொடர்கின்ற
பிழைகள் நீக்கி அருள்நாதா

கண்ணன் கீதைக் கருத்தெல்லாம்
கற்பவர் மகிழப் பொருள்கூறி
விண்ணை முட்டும் புகழோடு
விளங்கும் பூஜ்ய மகரிஷியின்
எண்ணம் மணக்க ரிஷிகேசில்
எண்பதில் இனிக்கும் சுத்தாநந்தா
மண்ணில் மேலும் பல்லாண்டு
மகிழ்ந்து வாழ்க குருநாதா

செய்யும் செயலை எனதென்று
ஜெகத்தில் மயங்கி அனுதினமும்
பொய்யில் வாழும் அடியேனின்
பிழைகள் போக்கி அருள்புரியும்
மெய்யின் வடிவே குருநாதா
மெல்ல உன்னை நானறிந்தே
உய்யும் வழியைத் தந்தருள்வாய்
உலகை ஆளும் தவநாதா

முருக. சண்முகசுந்தரம்